அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 03/2022

எனது இலக்கம் : EST 5/4/24(XL)
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2022.01.13

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.5000/- மாதாந்த கொடுப்பனவை வழங்குதல்</u>**

2022.01.03 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனைத்து அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு 2022.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஓய்வூதிய கணிப்பீட்டுக்கு ஏற்புடையதாகாத வகையில் ரூ.5000/- மாதாந்த கொடுப்பனவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. பின்வரும் நபர்கள் இந்தக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்கள்.

(அ). மாதாந்த சம்பளம் பெறும் நிரந்தர/ தற்காலிக/ ஒப்பந்த உத்தியோகத்தர்கள்

(ஆ). நாளாந்த சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள்

(இ). ஓய்வூதியதாரர்கள்

03. சம்பளமற்ற விடுமுறை பெற்றிருக்கும் உத்தியோகத்தர்கள் இந்தக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்களாக மாட்டார்கள். அரை சம்பள விடுமுறை பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு இந்த கொடுப்பனவின் அரைவாசியே உரித்துடையதாகும்.

04. நாளாந்த சம்பளம் பெறுபவர்களுக்கு, சேவைக்கு சமூகமளிக்க வேண்டிய முழுமையான நாட்களும் சேவைக்கு சமூகமளித்திருந்தால், முழு கொடுப்பனவும் செலுத்தப்பட வேண்டும், அவ்வாறு சமூகமளிக்கவில்லையெனில், சேவைக்கு சமூகமளித்த நாட்களின் விகிதத்திற்கு ஏற்ப கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும்.

05. எவரேனும் ஒரு உத்தியோகத்தர் பல ஓய்வூதியம் அல்லது ஓய்வூதியத்துடன் விதவைகள்/ தபுதாரர்/ அநாதைகள் ஓய்வூதியத்தை பெறுவாரானால் அத்தகைய நபருக்கு ஒரு மாதத்திற்கு கொடுப்பனவாக ரூ.5000/- மட்டுமே உரித்துடையதாகும்.

06. நடைமுறையில் உள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப, மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியத்துடன் உரித்தாகும் கொடுப்பனவு மட்டுமே உரித்தாகும்.

07. ஓய்வூதியதாரர்களுக்கு இந்த கொடுப்பனவை வழங்குவது குறித்து ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தினால் மேலதிக தெளிவுபடுத்தல்கள் வழங்கப்படும்.

08. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டவாக்க சபைகளின் உத்தியோகத்தர்களுக்கு இந்த கொடுப்பனவை வழங்குவது பற்றிய அறிவுறுத்தல்கள் பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும்.

09. மேலும் 2019.04.22ஆந் திகதிய 09/2019 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படும் ரூ.2500/- மாதாந்த இடைக்கால கொடுப்பனவு மற்றும் 2013.12.31ஆந் திகதிய 37/2013 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு தொடர்ந்தும் அப்படியே நடைமுறைப்படுத்தப்படும்.

10. இந்த சுற்றறிக்கை திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு